<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

**<u>O.S.No. 150/2024</u>**

11.02.2026 பி.வாசா.1 திரு. கணேசன்

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் 2016ம் வருடமே வாதியின் தகப்பனாருக்கு பிவாசாஆ.3 ஆன உயில் பத்திரம் விவரம் தெரிந்து அதில் தங்கம்மாளுக்கு ஆசை வார்த்தை கூறி வாதியும், அவரது தகப்பனாரும் உயில் ஆவணத்தை ரத்து செய்யாமல் விடமாட்டோம் என சொன்னதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் அப்படி எதுவும் சொல்லவில்லை. பிராது தபசில் சொத்துகள் அனைத்தும் 2016ம் ஆண்டு உயில் எழுதி தரப்பட்டதாக சொல்லப்படும் காலம் வரை நான், மாடசாமி வகையறா மற்றும் சுப்பையா வகையறா அவர்களுக்குரிய பாகத்தை அனுபவத்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி அனுபவம் எத்தனை ஆண்டு காலம் இருந்தது என்றால் சுமார் 5, 6 வருடம்.
2. எனக்கு என்ன வயது அகிறது என்றால் 66. எனக்கு மாடசாமி இளையவரா என்றால் மூத்தவர். எனக்கும் மாடசாமிக்கு எவ்வளவு வயது வித்தியாசம் இருக்கும் என்றால் 3,4 வயது வித்தியாசம் இருக்கும். சுப்பையா எனக்கு மூத்தவரா இளையவரா என்றால் சுப்பையா மூத்தவர் தான். எனக்கும் சுப்பையாவிற்கும் எத்தனை வயது வித்தியாசம் இருக்கும் என்றால் 10 வயது வித்தியாசம் இருக்கும்
3. மாடசாமி, சுப்பையா எல்லாருக்கும் விவசாயம் தான் தொழில் என்றால் சரிதான். மாடசாமி, சுப்பையா, எனக்கும் தனிப்பட்ட முறையில் கிரைய சொத்துகள் கிடையாது என்றால் மாடசாமி, சுப்பையாவிற்கு உள்ளதா என்று எனக்கு தெரியாது. எனக்கு முன்பு கிடையாது. மாடசாமி, சுப்பையா தபசில் சொத்திகளை அவர்கள் உயிருடன் இருக்கும் போது அனுபவம்

செய்து வந்தார்கள் என்றால் குறிப்பிட்ட காலத்தில் தான் விவசாயம் செய்தார்கள்.

4. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தபசில் சொத்துகள் அனைத்தும் சுப்பையாவோ, மாடசாமியோ குறிப்பிட்ட காலம் அனுபவம் செய்தார்கள் என்று மறுத்து சொல்லவில்லை என்றால் சரிதான். மேற் சொன்ன விஷயத்தை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிவாசாஆ 3 ஆன உயிலில் உள்ள விவரங்கள் எங்கள் வைத்து யாரல் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியும். தங்கம்மாள் சொல்லி டவுணில் உள்ள பாபு என்ற எழுத்தாளர் மூலமாக எழுதப்பட்டது. எந்த தேதியில் எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

5. தங்கம்மாளை என் மனைவி அழைத்து சென்றாரா என்றால் நானும் என் மனைவியும் துணைக்கு சென்றோம். தங்கம்மாளுக்கு படிப்பறிவு இல்லாதால் அவருக்கு பிவாசாஆ.3 உள்ள விவரம் தெரியாது என்றால் படிப்பறிவு இல்லை என்றால் சரிதான் ஆனால் அவருக்கு உயிலை படித்து காண்பித்த பிறகு தான் சம்மதித்து எழுதிக் கொடுத்தார். பிவாசாஆ.3 உயில் எழுதிக் கொடுக்கும் காலம் முன்பு தபசில் சொத்துகள் என் அனுபவத்தில் இல்லை என்றால் என் அனுபவத்தில் தான் இருந்தது. குறிப்பிட்ட காலம் மட்டும் தான் பயன்படுத்தினார்கள். உயில் கண்ட சங்கதியை தங்கம்மாளுக்கு படித்து காண்பித்து அவர் அதில் தெரிந்து கொண்டு சம்மதித்து எழுதி கொடுத்தார் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. தங்கம்மாளுக்கு எந்த காலத்திலும் தபசில் சொத்தை எனக்கு பாத்தியப்படுத்தி கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது என்றால் சரியல்ல. தங்கம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துகளை தங்கம்மாள் சம்மதத்துடன் அனைவரும் அனுபவித்த வந்த நிலையில் நான் மட்டும்

தங்கம்மாளை ஏமாற்றி நானும் என் மனைவியும் மோசடியாக உயில் பத்திரம் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

7. உயில் பத்திரம் பிறப்பிக்கப்பட்ட காலத்தில் தங்கம்மாள் நல்ல மனநிலையில் ஆரோக்கியத்துடன் இருந்தார் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயில் பத்திரத்தை பற்றிய விவரம் வாதிக்கு அசல் வழக்கு 496/2021 தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தான் தெரியும் என்றால் அதற்கு முன்பே தெரியும்.

8. வாதிக்கு உயில் பற்றி தெரியாது என்றும் வழக்கிற்காக தெரிந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயில் பத்திரத்தில் சொல்லப்பட்ட சாட்சிகள் அனைவரும் எனக்கு வேண்டிய நபர்கள் என்றும் அதனால் அவர்களை வைத்து மோசடியாக உயில் ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. தங்கம்மாள் அவர்களுக்கு தபசில் சொத்துகளை எனக்கு பாத்தியப்படுத்தி கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது என்றும் மேற்படி உயில் ஆவணம் மோசடியானது என்பதால் அதன் மூலமாக எனக்கு எந்த உரிமையும் தபசில் சொத்தை பொறுத்து கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

10. தங்கம்மாள் என்னை மகனாக பாவித்து வளர்த்தாகவும், கடைசி காலத்தில் நான் அவரை பராமரித்ததாகவும் பொய்யாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தங்கம்மாள் இறக்கும் போது அவரது இறுதி காரியங்கள் அனைத்தும் நான் மட்டும் செய்யதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. தங்கம்மாள் அவர்கள் எனது பெயருக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் ஆன பிவாசாஆ 8 எழுதிக் கொடுக்கும் சமயத்தில் அவருக்கு வயது 91 என்றால் அதற்கும் குறைவாக தான் இருக்கும். பிவாசாஆ.3

அதில் தங்கம்மாள் வயது 86 என சொல்லப்பட்டுள்ளது என்றும் அது சரியா தவறா என்றால் சரியாக தான் சொல்லப்படடுள்ளது.

12. பிவாசாஆ.8 எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் கதவு எண். 3/151 ல் குடியிருந்து வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் குடியிருந்து வருவதாக சொல்லப்பட்டுள்ள கதவு எண். 3/160 என பிவாசாஆ 8 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயில் ஆவணத்தில் கையெழுத்து செய்த கோபால் மகன் முருகன் தான் சாட்சியாக பிவாசாஆ.8 லும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர் ஆட்டோ ஒட்டி பிழைப்பு நடத்துவார் ஆட்டோவில் கூட்டி சென்றார்.

13. தங்கம்மாளுக்கு பிவாசாஆ 8 ல் சொல்லப்பட்டுள்ள கிரைய தொகை ரூ5,00,000 ரொக்கமாக நான் செலுத்தியது சம்பந்தமாக கணக்கு வழக்கு ஏதாவது என்னிடம் உள்ளதா என்றால் இல்லை ஆனால் ரூபாய் அவரிடம் கொடுத்தேன். கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் தங்கம்மாளுக்கு தெரியாமல் அவரை ஏமாற்றி அவரது கைரேகையினை ஆவணத்தில் பதிவு செய்து ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இருமுறை படித்து காண்பித்த பின்னர் தான் கைரேகை வைத்தார்.

14. பிவாசாஆ 8 பிறப்பிக்க பட்ட காலத்தில் தங்கம்மாள் என்பவருக்கு போதிய நினைவாற்றல் கிடையாது என்றும் அவர் ஆட்களை அடையாளம் தெரிய முடியாத நிலையில் இருந்தார் என்றும் அவருடைய இயலாமையை நான் பயன்படுத்தி சொத்தை அபகரிக்கும் நோக்கதுடன் பிவாசாஆ 8 ஐ மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

15. தங்கம்மாளுக்கு ரூ.5,00,000/- தேவைப்படும் அளவிற்கு எந்தவிதமான தேவையும் அவருக்கு இல்லை என்றும் நான் ரூ.5,00,000/- கிரைய தொகை கொடுக்காமல் ஆவணத்தில் மட்டும் வாசகம் சொல்லி கிரைய பத்திரம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவருக்கு

தேவையா இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது நான் கொடுத்தேன்.

16. கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள தபசில் சொத்துகளில் புல எண். 508/2 வாதியால் அனுபவம் செய்யப்பட்டு வாதி வசம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் பிவாசாஆ 8 ஆனது தங்கம்மாள் தெரிவித்ததின் பேரில் கிரைய பத்திரமாக பிறப்பித்துக் கொள்ளப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் தங்கம்மாள் தெரிவித்ததின் பேரில் தான் கிரைய பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி விவரத்தை எதிர்வழக்குரை மற்றும் பதில் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லாமல் வழக்கிற்காக சொல்லியுள்ளதாக தற்போது சொல்கிறேன் என்றால் சரியல்ல.

17. வாதிக்கு வழக்கு பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. பிவாசாஆ.3 மூலமாக பிறப்பிக்கப்பட்ட ஆவணங்களும் செல்லதக்கதல்ல அது தபசில் சொத்தில் வாதிக்குள் உரிமையை எந்த வகையிலும் கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. பிவாசாஆ 8 ம் மோசடி ஆவணம் என்பதால் அதன் மூலுமாகவும் எந்த உரிமையும் எனக்கு கிடைக்க கூடியது இல்லை என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 11.02.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.02.11 18:07:51 +0530

Principal District Munsif,
Tirunelveli.